Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

செய்தியாளர்கள் தேவை



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

மலர் Volume : 01 · இதழ் Issue : 129 · புதன்கிழமை Wednesday · 11.03.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

# ‘எரிவாயு தட்டுப்பாடுக்கு மாற்று ஏற்பாடு செய்யவேண்டும்’

## பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம்



சென்னை: வணிக எரிவாயு தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ள உணவகங்களுக்குத் தேவையான அனைத்து மாற்று ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும் என்றும், தேவைப்படும் கூடுதல் மின்சாரத்தைப் பெற்று வழங்கிட வேண்டுமென்றும் வலியுறுத்தி பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளதாக தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'அமெரிக்கா–ஈரான் போரினால் தமிழ்நாட்டுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், இது குறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இன்று விரிவாக ஆய்வு செய்தேன்.

தற்போது பாதிக்கப்பட்டுள்ள பல்வேறு வளைகுடா நாடுகளில் வாழும் தமிழர்களின் பாதுகாப்பையும் அப்பகுதியில் சிக்கியுள்ள தமிழ்நாட்டு மீனவர்களின் நலனையும் உறுதி செய்திடத் தேவையான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுத்திட வேண்டும் என்று பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளேன்.

இந்தப் போரால் ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாட்டினால் பொதுமக்களும் வணிக நிறுவனங்களும்,

தமிழ்நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளும் எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல் இருப்பதை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும்.

குறிப்பாக, வணிக எரிவாயு தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ள உணவகங்களுக்குத் தேவையான அனைத்து மாற்று ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும் என்றும், தேவைப்படும் கூடுதல் மின்சாரத்தைப் பெற்று வழங்கிட வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளேன்' எனத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, "ஈரான் - இஸ்ரேல், வளைகுடா நாடுகளுக்கு இடையே நடைபெற்று வரும் போர் காரணமாக பெட்ரோலிய பொருட்களை இந்தியாவுக்கு கொண்டுவருவதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இதன் காரணமாக வணிக மற்றும் தொழிற்சாலை பயன்பாட்டுக்கான சிலிண்டர் விநியோகத்தைத் தற்காலிகமாக நிறுத்துவதாக இந்தியன் ஆயில் நிறுவனம் அறிவித்துள்ளது. எல்பிஜி–க்கு மாற்றாக வேறு எரிபொருளை பயன்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்து உள்ளது.

தமிழகத்தில் ஏற்கெனவே சில மாவட்டங்களில் சிலிண்டர்கள் கிடைக்காததால் உணவகங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினை மேலும் தீவிரமடையாமல் இருக்க, உரிய நடவடிக்கைகளை எடுத்து, தக்க நேரத்தில் சிலிண்டர்கள் கிடைக்க ஆவண செய்ய வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்துகிறேன்.

அதேபோல், மக்களிடையே இதை வைத்து தேவையற்ற அச்ச உணர்வை ஏற்படுத்தும் வேலைகளை விடுத்து, தமிழகத்தில் உணவகங்கள் தொடர்ந்து இயங்குவதற்கான எரிவாயு ஏற்பாடுகள் மற்றும் சலுகைகளை பொறுப்புள்ள மாநில அரசாக செய்து தர வேண்டும் எனவும், ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க, அம்மா உணவகங்களை மேலும் முழுவீச்சில் இயங்கவைத்து, எவ்வித தடையுமின்றி தொடர்ந்து உணவு வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் எனவும் திமுக அரசை வலியுறுத்துகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

# கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாடு: தீர்வு காண மத்திய, மாநில அரசுகளுக்கு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்



ப்சென்னை: 'தமிழகத்தில் ஏற்கெனவே சில மாவட்டங்களில் சிலிண்டர்கள் கிடைக்காததால் உணவகங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த பிரச்சினை மேலும் தீவிரமடையாமல் இருக்க, தக்க நேரத்தில் சிலிண்டர்கள் கிடைக்க ஆவண செய்ய வேண்டும் என மத்திய அரசை அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், 'ஈரான் - இஸ்ரேல், வளைகுடா நாடுகளுக்கு இடையே நடைபெற்று வரும் போர் காரணமாக பெட்ரோலிய பொருட்களை இந்தியாவுக்கு கொண்டுவருவதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இதன் காரணமாக வணிக மற்றும் தொழிற்சாலை பயன்பாட்டுக்கான சிலிண்டர் விநியோகத்தைத் தற்காலிகமாக நிறுத்துவதாக இந்தியன் ஆயில் நிறுவனம் அறிவித்துள்ளது. எல்பிஜி–க்கு மாற்றாக வேறு எரிபொருளை பயன்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழகத்தில் ஏற்கெனவே சில மாவட்டங்களில் சிலிண்டர்கள் கிடைக்காததால் உணவகங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினை மேலும் தீவிரமடையாமல் இருக்க, உரிய நடவடிக்கைகளை எடுத்து, தக்க நேரத்தில் சிலிண்டர்கள் கிடைக்க ஆவண செய்ய வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்துகிறேன்.

அதேபோல், மக்களிடையே இதை வைத்து தேவையற்ற அச்ச உணர்வை ஏற்படுத்தும் வேலைகளை விடுத்து, தமிழகத்தில் உணவகங்கள் தொடர்ந்து இயங்குவதற்கான எரிவாயு ஏற்பாடுகள் மற்றும் சலுகைகளை பொறுப்புள்ள மாநில அரசாக செய்து தர வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க, அம்மா உணவகங்களை மேலும் முழுவீச்சில் இயங்கவைத்து, எவ்வித தடையுமின்றி தொடர்ந்து உணவு வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் எனவும் திமுக அரசை வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

### டிடிவி தினகரன்


'தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கான காஸ் சிலிண்டர் விநியோகம் நிறுத்தத்தால் உணவகங்கள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. காஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டை போக்க மத்திய, மாநில அரசுகள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'மத்திய வளைகுடா நாடுகளில் நிலவும் போர் பதற்ற சூழல் காரணமாக தமிழகத்தில் தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கான காஸ் சிலிண்டர் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும், வீட்டு பயன்பாட்டிற்கான சிலிண்டர் விநியோகம் குறைக்கப்பட்டிருப்பதாகவும் ஊடகங்களிலும், நாளிதழ்களிலும் செய்திகள் வெளியாகியுள்ளன. சாதாரண தேநீர் கடைகளில் தொடங்கி பெரிய விடுதிகள் வரை அனைத்து வகையான உணவகங்களுக்கும் அடிப்படை தேவைகளில் ஒன்றான காஸ் சிலிண்டர் விநியோகம் திடீரென நிறுத்தப்பட்டிருப்பதால் உணவகங்கள் அனைத்தும் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

காஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டால் உணவகங்கள் மூடப்படும் பட்சத்தில் கிராமப்புறங்களில் இருந்து சென்னை போன்ற பெருநகரங்களுக்கு வந்து பணியாற்றிக் கொண்டிருக்கும் இளைஞர்களின் உணவுத் தேவை பாதிக்கப்படுவதோடு, அந்த உணவகங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கும் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பும் எதிர்காலமும் கேள்விக்குறியாகும் சூழல் உருவாகியுள்ளது. நாடுமுழுவதும் காஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டை போக்கிட போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கவும், தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு தங்கு தடையின்றி காஸ் சிலிண்டர்கள் விநியோகம் செய்திடுவதை உறுதி செய்திட வேண்டுமென மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச விமான நிலையமாகிறது மதுரை விமான நிலையம்

## மத்திய அமைச்சரவை ஒப்புதல்



மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்த பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

மதுரை விமான நிலையத்தை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொண்டு வருவதாகவும் அதற்கு சர்வதேச விமான நிலையம் அந்தஸ்து வழங்குவது குறித்து பரிசீலனையில் உள்ளதாகவும் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம்மோகன் நாயுடு ஏற்கெனவே மக்களவையில் கூறியிருந்தார்.

பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் பல்வேறு முக்கிய முடிவுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, தமிழ்நாட்டில் உள்ள மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக உயர்த்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

தமிழ்நாட்டின் கோயில் நகரமான மதுரையில் அமைந்துள்ள மதுரை விமான நிலையம் பழமையான விமான நிலையங்களில் ஒன்று. தெற்கு தமிழ்நாட்டிற்கான ஒரு முக்கிய நுழைவுவாயிலாக இருக்கிறது. சுற்றுலா மற்றும் புனித யாத்திரையை ஊக்குவிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது, இதன் மூலம் மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் பங்களிக்கிறது.

மதுரை விமான நிலையத்தை சர்வதேச அந்தஸ்துக்கு உயர்த்துவது பல்வேறு நாடுகளை இணைக்கும். வர்த்தகத்தை, பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும். சர்வதேச அளவில் சுற்றுலாப் பயணிகள் வருவதுடன் வணிகங்களை ஈர்க்கும் வகையில் மதுரை சர்வதேச விமான நிலையம் இருக்கும் என்று மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் செய்தியாளர்கள் சந்திப்பில் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

அதேபோல கிராமப்புற பகுதிகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் ஜல்ஜீவன் திட்டத்தை 2028 டிசம்பர் வரை நீட்டிக்கவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்வேறு பணிகளைத் தொடக்கி வைக்கவும் தேசிய ஜனநாயகக் கூட்டணி மாநாட்டில் கலந்துகொள்ளவும் பிரதமர் மோடி திருச்சி வரவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தங்கம் விலை உயர்வு: சவரனுக்கு ரூ.800 அதிகரிப்பு



சென்னை: 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.800 உயர்ந்து ஒரு சவரன் ரூ.1,20,400-க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளியின் விலை கிராமுக்கு ரூ. 10 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.300-க்கும், ஒரு கிலோ வெள்ளி ரூ.3,00,000-க்கும் விற்பனையாகிறது. நடப்பாண்டு தொடங்கியது முதலாகவே, தங்கம் விலை பல முறை அதிகரித்து புதிய உச்சத்தை தொட்டு வந்த நிலையில், பிப்ரவரி மாதத்தில் ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்டது. தற்போது இஸ்ரேல் - ஈரான் போர் பதற்றத்தால் பங்குச் சந்தைகள் வீழ்ச்சியடைந்து வருகின்றன.

இதனால் வரலாற்றிலேயே முதன்முறையாக மார்ச் 1ஆம் தேதியான ஞாயிற்றுக்கிழமை தங்கம் மற்றும் வெள்ளி விலையில் பெரிய அளவில் மாற்றம் ஏற்பட்டது.

படிப்படியாகக் குறைந்து வந்த தங்கம் விலை, நகை பிரியர்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இருப்பினும், தங்கம் விலை அவ்வப்போது ஏற்ற இறக்கத்துடன் தான் காணப்பட்டு வந்தது.

வாரத்தின் முதல் நாளான திங்கள்கிழமை தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.800 குறைந்து ரூ.1,19,600-க்கும் விற்பனையானது.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை தங்கம் விலை சற்று உயர்ந்துள்ளது. அதன்படி சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.800 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.1,20,400-க்கும், கிராமுக்கு ரூ.100 உயர்ந்து ரூ.15,050-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலை கிராமுக்கு ரூ.10 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.300-க்கும் விற்கப்படுகிறது. அதன்படி, ஒரு கிலோ கட்டி வெள்ளி ரூ.10,000 உயர்ந்து, ஒரு கிலோ வெள்ளி ரூ.3 லட்சத்துக்கும் விற்கப்படுகிறது.





சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் மகளிர் தின விழா நடைபெற்றது.கல்லூரியின் முதல்வர் முனைவர் வசந்தி தலைமை வகித்து மகளிர் தினத்தின்முக்கியத்துவம்பற்றி எடுத்து கூறினார். வேதியியல்துறைஇணைப்பேராசிரியர் முனைவர் கஸ்தூரி வரவேற்புரை ஆற்றினார். இயற்பியல் துறை தலைவர் பேராசிரியர் கவிதா சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார். பெண்ணிய எழுத்தாளர் தேனம்மை லட்சுமணன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு , சமூக ஊடகங்களின் மூலம் பெண்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் குறித்து எடுத்துக் கூறி அவற்றை எப்படி எதிர்கொள்வது என்றும் பெண்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்வது எப்படி என்றும் தனது சிறப்புரையில் விளக்கிக் கூறினார். மகளிர் தின போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. கணிதத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் கவிதா நன்றி கூறினார். இதில் ஏராளமான மாணவிகள் கலந்து கொண்டனர்.

## தமிழக வெற்றிக் கழகம் சார்பில் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கோட்டையூரில் சர்வதேச மகளிர் தின விழா எழுச்சியுடன் கொண்டாட்டம்



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, சிவகங்கை மாவட்டம் சாக்கோட்டை மேற்கு ஒன்றிய தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் மகளிர் தின விழா கோட்டையூரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சாக்கோட்டை மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் சரத்பாலமுருகன் தலைமை தாங்கினார். விழாவில் சிவகங்கை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் திரு. எம். ஜோசப் தங்கராஜ் சிறப்புஅழைப்பாளராகக் கலந்துகொண்டு, கட்சி அலுவலகத்தில் கேக் வெட்டி பெண்களுக்கு இனிப்புகளை வழங்கி சிறப்பித்தார்.

நிகழ்ச்சியில், ஒன்றிய இணைச் செயலாளர் மணிகண்டன் வேம்பு, பாண்டியராஜன், கோட்டையூர் பேரூர் செயலாளர் சீனிவாசன்,துணைச் செயலாளர்சித்ராவைரமுருகன், வெள்ளளவயல் A. காசிநாதன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் செல்ல மாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஸ்ரீதேவி, உறுப்பினர் சேர்க்கைஅணிஅமைப்பாளர் சௌந்தர்யா, வழக்கறிஞர் அணி அதிபதியா, கானாடுகாத்தான் பேரூர் செயலாளர் முத்துக்குமார், பொருளாளர் கணேசன், ஆறுமுகம், சந்திரா, கோட்டையூர் நிர்வாகிகள் சண்முகம், விஜய்காசி, மாவட்ட மாணவரணி இணை அமைப்பாளர்விக்னேஷ், பள்ளத்தூர் நாகராஜன், முருகானந்தம் மற்றும் திருப்பத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் தாஜ் அப்துல்லா உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர் கிளை நிர்வாகிகள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் கலந்துகொண்டனர். விழாவின் நிறைவாக, பேரூர்கழகமகளிர்அணி செயலாளர் சூரிய பிரபா அனைவருக்கும் நன்றி கூறினார்.

## சிவகங்கை மாவட்டம் காரைக்குடி ஸ்ரீ அழகு நாச்சியம்மன் கோவில் கும்பாபிஷேகம்

### தமிழக வெற்றிக் கழகம் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம்

சிவகங்கை மாவட்டம், கோட்டையூரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ அழகு நாச்சியம்மன் திருக்கோவில் கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு, தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் பக்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் பிரம்மாண்டமான அன்னதானம் வழங்கப்பட்டது. சாக்கோட்டை மேற்கு ஒன்றிய தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில்நடைபெற்றஇந்த நற்பணித் திட்டத்திற்கு, ஒன்றிய கழகச் செயலாளர் க. சரத்பாலமுருகன் தலைமை தாங்கினார். சிவகங்கை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் திரு. எம். ஜோசப் தங்கராஜ்சிறப்புஅழைப்பாளராகக் கலந்து கொண்டு, அன்னதானத்தைத் தொடங்கி வைத்துச் சிறப்பித்தார்.



இந்நிகழ்வில் ஒன்றிய இணைச் செயலாளர் மணிகண்டன் வேம்பு, பாண்டியராஜன், கோட்டையூர் பேரூர் செயலாளர் சீனிவாசன்,துணைச் செயலாளர்சித்ராவைரமுருகன், வெள்ளளவயல் A. காசிநாதன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் செல்ல மாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஸ்ரீதேவி, உறுப்பினர் சேர்க்கைஅணி அமைப்பாளர் சௌந்தர்யா, வழக்கறிஞர் அணி அதிபதியா, கானாடுகாத்தான் பேரூர் செயலாளர் முத்துக்குமார், பொருளாளர் கணேசன், ஆறுமுகம், சந்திரா, கோட்டையூர் நிர்வாகிகள் சண்முகம், விஜய்காசி, மாவட்ட மாணவரணி இணை அமைப்பாளர்விக்னேஷ், பள்ளத்தூர் நாகராஜன், முருகானந்தம் மற்றும் திருப்பத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் தாஜ் அப்துல்லா உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர் மற்றும் கிளை நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.



## மானாமதுரை நகராட்சியின் சாதாரண நகர் மன்ற உறுப்பினர்கள் கூட்டம் நகர்மன்ற தலைவர் தலைமையில் நடைபெற்றது

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி அலுவலகத்தில் உள்ள கூட்டரங்கில் சாதாரண 'நகர் மன்ற கூட்டம்' முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும்,நகர்மன்றதலைவருமான சோ. மாரியப்பன் கென்னடி அவர்களின் தலைமையிலும், நகர் மன்ற துணைத் தலைவர் பாலசுந்தரம் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதியில் நடைபெற்று வரும் திட்ட பணிகள், கட்டுமான பணிகள் குறித்தும்,வார்டு பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் மேம்பாடுகள் குறித்தும், பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு நகர் மன்ற உறுப்பினர்களிடம் விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு விவாதிக்கப்பட்டதோடு, சில முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டது.

குறிப்பாக 21வது நகர் மன்ற உறுப்பினர் செல்வக்குமார் தெரு நாய்களுக்கு உணவு வழங்குவோர் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தினார். 3வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் அதிமுகவைசேர்ந்த கங்காதனது வார்டு பகுதிகளில் திட்ட பணிகளிலும், கழிவுநீர், சின்டெக்ஸ் டேங்க் உள்ளிட்ட அடிப்படை வசதிகளில் தனக்கும் தனது வார்டு பொதுமக்களுக்கும் திருப்தி அளிக்கவில்லை என தெரிவித்து நகர் மன்ற கூட்டத்தை புறக்கணித்து வெளிநடப்பு செய்தார்.

அதேபோல் 1வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் தேன்மொழி சின்டெக்ஸ் டேங்க் பராமரிப்பு பணி மேற்கொள்ள வலியுறுத்தினார். 10வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் முனியசாமி தனது வார்டில் உள்ள பிரச்சினை குறித்து வலியுறுத்தினர். 7வது வார்டுநகர்மன்றஉறுப்பினர் மாரிக்கண்ணன் தனது வார்டு பகுதிகளில் நடைபெறும் திட்ட பணிகளின் உள்ள சந்தேகங்களை கேட்டறிந்தார்.

இந்நிகழ்வில் தேன்மொழி, இந்துமதி, கங்கா, அமுதா, சண்முகப்பிரியா, மாரிக்கண்ணன், இந்திரா, முனியசாமி, லதாமணி, நதியா, மணிமேகலை, சதீஷ்குமார், தெய்வேந்திரன், காளீஸ்வரி, பாலாஜி, ராஜேஸ்வரி, லெட்சுமி, சத்தியா, செல்வக்குமார், சித்ரா, வேல்முருகன், நாகஜோதி, அழகர்சாமி உள்ளிட்ட நகர் மன்ற உறுப்பினர்கள், கௌரவ உறுப்பினர், நகராட்சி பொறியாளர் பட்டுராஜன், மேலாளர் பால கிருஷ்ணன்,துப்புரவு ஆய்வாளர் பாலமுருகன் மற்றும் நகராட்சி அலுவலக ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியாக நகர் மன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை பரிசீலித்த நகர் மன்ற தலைவர் மற்றும் துணைத்தலைவர் ஆகியோர் திட்டப்பணிகளில் எந்த ஒரு தொய்வின்றியும், விரைவாகவும், தரமாகவும் செய்துதர நகராட்சி பொறியாளரையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கேட்டுக் கொண்டு, நன்றியுரை ஆற்றினர்.



உலக மகளிர் தினத்தை முன்னிட்டு விஜய் வழிகாட்டுதலின்படியும் திருப்பூர் கிழக்கு மாவட்டம் செயலாளர் யுவராஜ் அவர்கள் ஆலோசனையின் படியும் தாராபுரம் வடக்கு நகரம் செயலாளர் ரமேஷ் தலைமையில் நகரத் துணைச் செயலாளர் நகர செயற்குழு உறுப்பினர்கள் ரஜினிகுமார், மேகலா, இதயகுமார், பேரூராளி தினகரன் மற்றும் வார்டு செயலாளர் மணிகண்டன் ஆகியோர் கலந்து சேர்ந்து ஸ்ரீசாய் முதியோர் இல்லத்திற்கு நம் வயதிற்கு மூத்த பெண்மணிகளுக்கு உடைகள் மற்றும் இனிப்புகள் வழங்கியும் அவர்களுடன் கலந்துரையாடி தொடர்ந்து அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவதாக தெரிவித்தனர்



கிருஷ்ணகிரி மாவட்டம் நக்கல்பட்டி கிராமத்தில் அரசு உயர்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது. பள்ளியில் 500 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர் ஆண்டுதோறும் சிறப்பாக ஆண்டுவிழா நடத்தி வரும் கிராம மக்கள் 25ம் வெள்ளி விழாவாக இந்த ஆண்டு ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் கலை நிகழ்ச்சிகள், கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி, சிலம்பம்போட்டி வைக்கப்பட்டு வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. தமிழர்களின் வீர கலையை வெளிப்படுத்தும் விதமாக இந்த ஆண்டு முதல் மாணவ மாணவிகளுக்கு சிலம்பம் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. சிலம்பம் பயிற்சியாளர் குருராகவேந்திரர் பள்ளி மாணவர்களுக்கு பயிற்சிகள் அளித்து வருகிறார். தலைமை ஆசிரியை சித்ரா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் ஆசிரியர்கள் பூபேஷ் சந்திரன், மணிமுத்து, ரேணுகா, ஜவகர் ஜோசப், யாஸ்மின் பானு, பிரகாசன், சாருமதி, ஜோதி, தொன் பால்கோ , பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர்விஜயன்துணைத்தலைவர்கணேசன்உள்ளிட்ட கிராம மக்கள் பலர் கலந்துக்கொண்டனர்.

## கீழக்கோட்டையில் ஆசிரியை கமலம்பாயின் பணி நிறைவு பாராட்டு விழா

### பெற்றோர் ஆசிரியர் கழகம் பள்ளி மேலாண்மை குழு பாராட்டு



சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கழகம் பள்ளி மேலாண்மை குழு கூட்டம் நடைபெற்றது. பள்ளி மேலாண்மை குழுத் தலைவி நித்யா தலைமை வகித்தார்.பள்ளியின்தலைமைஆசிரியர்தெய்வானை பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவி வசந்தமலர் முன்னிலை வகித்தனர். கணிதப் பட்டதாரி ஆசிரியர் மீனாட்சி வரவேற்புரையாற்றினார். பள்ளியின் தலைமை ஆசிரியை தெய்வானை பள்ளியின் மாணவர் சேர்க்கை குறித்தும் பள்ளி ஆண்டு விழா நடத்துவது குறித்தும் விரிவாக விளக்கிப் பேசினார். 22 வருடங்களாக சிறப்பாக பணியாற்றி பணி நிறைவு பெறும் ஆசிரியை கமலம்பாயின் பணி நிறைவு பாராட்டு விழாவினை அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி சிறப்பாக ஒருங்கிணைத்தார். ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா ஆசிரியை வாசுகி வாழ்த்துரை வழங்கினர். ஆசிரியை கமலம்பாய் ஏற்புரை வழங்கினார். ஆசிரியர்கள் சார்பாக பணி நிறைவு ஆசிரியைக்கு நினைவு பரிசுகள் வழங்கப்பட்டன. கணினி பயிற்றுநர் வித்யா நன்றி கூறினார். பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள் பள்ளி மேலாண்மை குழு செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## ரூ.2 கோடியே பத்து லட்சம் மோசடி நகை மதிப்பீட்டாளர் கைது




நாகர்கோவில் வடசேரியில் உள்ள பிரதான வங்கியின் தலைமை கிளையில் நகை மதிப்பீட்டாள ராகபணியாற்றியவர் ரகுவரன் (36). இவர் மீது மோசடி குற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து வங்கியில் இருந்த நகைகளை தணிக்கைக்குழுவினர் சோதனை செய்தனர். சோதனையில் போலி நகைகள் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இவ்வாறு போலி நகைகளை அடகு வைத்து ரூ. 2 கோடியே 10 லட்சம் மோசடி செய்ததும் கண்டறியப்பட்டது. இதுகுறித்த மேலாளர் புகாரின் பேரில் வடசேரி போலீசார் ரகுவரனைகைது செய்து விசாரணைநடத்திசிறையில் அடைத்தனர்.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் திரவியம் மருத்துவமனை அருகே கார் மீது மீன் ஏற்றி வந்த டெம்போ மோதி விபத்து அதிர்ஷ்டவசமாக உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது இது குறித்து போக்குவரத்து புலனாய்வு போலீசார் விசாரணை.

## கீழக்கரை அனைத்து சமுதாய கூட்டமைப்பின் சார்பில் முகம்மது சதக் பொறியியல் கல்லூரியில் இஃப்தார் நிகழ்வு

கீழக்கரை அனைத்து சமுதாய கூட்டமைப்பு ஒருங்கிணைத்த இஃப்தார் நிகழ்வு முகமது சதக் பொறியியல் கல்லூரி அரங்கில் சிறப்பாக நடைபெற்றது இந்நிகழ்வு ஏற்பாட்டினை கூட்டமைப்பின் தலைவர் ஹாமித் இப்ராஹிம், பி ஆர் எல் சதக் அப்துல் காதர் மற்றும் கவுன்சிலர் ஷேக் உசேன், முகமது ஃபருஸ் உள்ளிட்டோர் ஒருங்கிணைப்பு செய்திருந்தனர், இதில் இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அன்வர் ராஜா, அப்துல் ரஹ்மான், தமுமுக பொதுச்செயலாளர் பேராசிரியர் ஹாஜா கனி, தமுமுக மாநில துணைப் பொதுச் செயலாளர் எஸ் சலிமுல்லாஹ்கான் , எஸ் டி பி ஐ கட்சி மாநிலத் துணைத் தலைவர் அப்துல் ஹமீது,மற்றும் நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் ஆளூர் ஷாநவாஸ், தமிழ்நாடு இஸ்லாமிய கூட்டமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் சம்சுதீன், திமுக நகர் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.புனிதமான ரமலான் மாதம் தியாகம், பொறுமை, கருணை மற்றும் சகோதரத்துவத்தின் உயர்ந்த மதிப்புகளை நமக்கு நினைவூட்டு வதாக கலந்து கொண்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் தெரிவித்தனர்.



மத நல்லிணக்கம், மனிதநேயம் மற்றும் சமூக ஒற்றுமையை வலுப்படுத்தும் இத்தகைய இப்தார் நிகழ்வுகள் மக்களை ஒன்றிணைக்கும் அழகான தருணங்களாக அமைந்ததாகவும் கூறினார் இதில் மத அறிஞர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், ஊர் முக்கியஸ்தர்கள் அரசியல் கட்சி பிரமுகர்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். சமத்துவ இஃப்தார் நிகழ்வு மத நல்லிணக்கம் மற்றும் மனிதநேயத்திற்கும் அடையாளமாக திகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்களுக்கு கூட்டமைப்பு சார்பில் நினைவு பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர், இதில் 3000 க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர் நிகழ்ச்சியின் இறுதியில் அனைவரும் இரவு விருந்து உபசரிப்பு வழங்கப்பட்டது.

## கோட்டையூர் – அழகாபுரியில்
# தமிழக வெற்றிக் கழகக் கொடி ஏற்றி இனிப்பு வழங்கல்!



சிவகங்கை மாவட்டம், கோட்டையூர் அருள்மிகு ஸ்ரீ அழகு நாச்சியம்மன் திருக்கோவில் கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு, தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் கோட்டையூர் - அழகாபுரி பகுதியில் கழகக் கொடியேற்று விழா எழுச்சியுடன் நடைபெற்றது.

சாக்கோட்டை மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் க. சரத்பாலமுருகன் அவர்களின் இல்லத்தில் நடைபெற்ற இந்த விழாவிற்கு அவர் தலைமை தாங்கினார். சிவகங்கை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் திரு. எம். ஜோசப் தங்கராஜ் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு, கழகக் கொடியினை ஏற்றி வைத்து, அங்கிருந்தவர்களுக்கு இனிப்புகளை வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் ஒன்றிய இணைச் செயலாளர் மணிகண்டன் வேம்பு, பாண்டியராஜன், கோட்டையூர் பேரூர் செயலாளர் சீனிவாசன், துணைச் செயலாளர் சித்ரா வைரமுருகன், வெள்ளளவயல் காசிநாதன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் செல்ல மாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும், மாவட்ட, ஒன்றிய, பேரூர் மற்றும் கிளை நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# கீழ் அத்திவாக்கம் ஊராட்சியில் மரக்கன்று நடும் விழா



உலக வனதினம் 2026-ஐ முன்னிட்டு, எஸ்ஆர்எம் வேளாண் அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) பிரிவு, எஸ்ஆர்எம் ஐஎஸ்டியின் உன்னத் பாரத் அபியான் (UBA) அலகுடன் இணைந்து இன்று காலை கீழ் அத்திவாக்கம் கிராமத்தில் சிறப்பான மரம் நடும் விழாவை நடத்தியது.

இந்த நிகழ்ச்சியில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் - பொறுப்பு முதல்வர் முனைவர் திருஞானகுமார், முனைவர் ஆர். மகேந்திரன், முனைவர் என். பெரியசாமி மற்றும் திரு. தினேஷ் - ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் கீழ் அத்திவாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் உள்ளூர் கிராம மக்கள் இணைந்து, யுபிஏ தத்தெடுத்துள்ள இந்த கிராமத்தில் பல உள்ளூர் இன மரக்கன்றுகளை நட்டு சுற்றுச்சூழல் நிலைத்தன்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர்.

இந்தக் கூட்டு முயற்சி, செயல்முறை பசுமை நடைமுறைகள் மூலம் பல்கலைக்கழகம்-சமூக இணைப்பை மேலும் வலுப்படுத்துகிறது. பங்கேற்பாளர்கள் நீண்டகால சுற்றுச்சூழல் நன்மைகள் மற்றும் உள்ளடக்கிய ஊரக வளர்ச்சியின் அவசியத்தையும் எடுத்துரைத்தனர். இவ்வெற்றிகரமான நிகழ்வு, எதிர்கால சந்ததியினருக்காக பசுமையான மற்றும் நிலையான எதிர்காலத்தை உருவாக்க இயற்கையைப் பேணும் எஸ்ஆர்எம் நிறுவனத்தின் உறுதியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியது.

## கூடலூர் அருகே பாண்டியார் தேயிலை தொழிற்சாலையில்
# தொழிலாளர்களுக்கு இலவச மருத்துவ முகாம்



கூடலூர் அருகே பாண்டியார் தேயிலை தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கு இலவசமருத்துவமுகாம் நடைபெற்றது. கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், செஞ்சிலுவை சங்க மருத்துவ குழு, ஆல் தி சில்ரன் ஆகியன சார்பில் நடைபெற்ற மருத்துவ முகாமிற்கு கூடலூர் நுகர்வோர் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம் தலைமை தாங்கினார். தேயிலை தொழிற்சாலை டீ மேக்கர் சேகர், ஆல் தி சில்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித், செஞ்சிலுவை சங்க நிர்வாகி லாய்சன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பாண்டியார் தேயிலை தோட்ட கோட்ட மேலாளர் ஜோ பெனோ முகாமை துவக்கி வைத்தார். முகாமில் செஞ்சிலுவை சங்க மருத்துவ குழு மருத்துவர் ஶ்ரீநாத் தலைமையில் மருந்தளுநர் நவீன், செவிலியர் சுமதி உள்ளிட்டோர் அடங்கிய மருத்துவ குழுவினர் தேயிலை தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு இரத்த அழுத்தம், இரத்த சர்க்கரை அளவு மற்றும் பொது மருத்துவ பரிசோதனை மேற்கொண்டனர். தேவையுள்ளவர்களுக்கு மருந்துகள் வழங்கப்பட்டது. முகாமில் தேயிலை தோட்ட தொழிலாளர்கள் உள்ளிட்ட 50கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பரிசோதனை செய்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் சென்னையில் இருந்து காணொலி காட்சி வாயிலாக மதுரை மாவட்டம், தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில், மறு கட்டுமானத் திட்டத்தின் கீழ் மதுரை மத்திய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சுப்பிரமணியபுரத்தில் ரூபாய் 62.68 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிகுடியிருப்புகளைபயன்பாட்டுக்குதிறந்துவைத்தார்கள். அதனைதொடர்ந்து மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் பயனாளிகளுக்கு வீட்டிற்கான ஆணை மற்றும் சாவியை வழங்கி குத்துவிளக்கேற்றி வைத்து பார்வையிட்டார் மாநகராட்சி ஆணையாளர் திரு சித்ரா விஜயன் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அன்பழகன் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்



ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் A. சுஜாதா தலைமையில் (09.03.2026] அன்று குற்றத் தடுப்பு ஆய்வு கூட்டம் நடைபெற்றது. மேலும் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையகம்) உடன் இருந்தனர்.



தமிழகத்தில் கல் சிற்பக் கலைக்கு பெயர் பெற்று விளங்கும் மயிலாடியில் சிலை செய்வதற்குத் தேவையான கற்கள் கிடைக்காததால் தொழில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## தஞ்சாவூர் மாவட்டத்தில்
# கலை பண்பாட்டுத் துறை, மண்டலக் கலை பண்பாட்டு மையம் சார்பில் மாணவர்களுக்கு கலைப் போட்டிகள்



கலை பண்பாட்டுத் துறை மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் மாவட்ட சவகர் சிறுவர் மன்றம், கடலூர் இணைந்து நடத்திய மாவட்ட அளவிலான கலைப் போட்டிகள் நடந்தது

கலை பண்பாட்டுத் துறை, மண்டலக் கலை பண்பாட்டு மையம் சார்பில் சவகர் சிறுவர் மன்றங்களில் 5 வயது முதல் 16 வயதிற்குட்பட்ட சிறார்களுக்கு குரலிசை பரதநாட்டியம், ஓவியம், கிராமிய நடனம் ஆகிய கலைகளில் போட்டிகள் நடத்தி வெற்றிப் பெறும் மாணவர்களுக்கு பாராட்டுச்சான்றும், பரிசுகளும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கடலூர் சவகர் சிறுவர் மன்றத்தின் வாயிலாக 7.3.2026 அன்று புனித வளனார் தொடக்கப் பள்ளியில் குரலிசை, பரதநாட்டியம், ஓவியம், கிராமிய நடனம் ஆகிய கலைகளில் போட்டிகள் நடத்தப்பட்டது.

இப்போட்டிகளில் நடுவராக குரலிசைக் கலைக்கு திருமதி.சாந்தி, திருமதி.விஜயஸ்ரீ யும், பரதநாட்டியக் கலைக்கு திருமதி.கலை வடிவு, திருமதி ஹேமா மஞ்சுளாவும், ஓவியப் போட்டிக்கு திரு.மனோகரன், திருமதி.கீதாவும், கிராமிய நடனப்போட்டிக்கு திருமதி. வள்ளி, திரு. ரகுநாத் ஆகியோர்கள் நடுவர்களாக பணியாற்றினர்.

இப்போட்டியில் வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு பரிசும், பாராட்டுச் சான்றிதழும், தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநர் திரு.ம. இராஜாராமன், கடலூர் மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் திரு. தமிழ் இனியன் வெற்றி பெற்ற மாணவர்களை பாராட்டி சான்றிதழ் வழங்கினார். திட்ட அலுவலர் திரு. ரிமன்ராஜ் அவர்கள் நன்றி கூறினார்.

இந்தகவலை தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநர் திரு.ம. இராஜாராமன் அவர்கள் தெரித்துள்ளார்.



பெண்களின் சபரிமலை என அழைக்கப்படும் கன்னியாகுமரி மாவட்ட மண்டைகாடு அருள்மிகு பகவதி அம்மன் கோவிலின் மாசி கொடை விழாவில் முக்கிய நிகழ்வான பெரிய தீவட்டி ஊர்வலம் விமர்சையாக நடைபெற்றது. விழா கொடியேற்றத்துடன் தொடங்கி வலியடுக்கை பூஜை, பொங்கல் வழிபாடு உள்ளிட்ட பல்வேறு ஆன்மிக நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றன. ஒன்பதாம் நாள் இரவு நடந்த தீவட்டி ஊர்வலத்தில் குமரி மாவட்டம் மற்றும் கேரளாவிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மன் தரிசனம் பெற்றனர். விழாவை முன்னிட்டு மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறையும் அறிவிக்கப்பட்டது.



தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மதன் புதுக்கோட்டை காவல் நிலையத்தில் திடீர் ஆய்வு செய்து, அங்கு பராமரிக்கப்படும் ஆவணங்களையும், முக்கிய வழக்கு கோப்புகளையும் பார்வையிட்டார். மேலும் காவல் நிலைய போலீசாரிடம் அவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் அறிவுரைகள் வழங்கினார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (09.03.2026) அன்று மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் தலைமையில் அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில் குண்டம் பெருந்திருவிழாவினையொட்டி மேற்கொள்ளப்படவேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன்கோபிசெட்டிபாளையம்சார்ஆட்சியர் சிவானந்தம், உதவி வன பாதுகாவலர் ,நிதின் ஹெச்.ஆர். உட்பட பலர் உள்ளனர்.

# மாடு மற்றும் மாட்டு கன்றுக்குட்டி திருட்டு வழக்கில் 3 பேர் கைது



ஈரோடு மாவட்டம் கோபி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட இந்திரா நகர் என்ற இடத்தில் கோபி, பொலவக்காளிபாளையம், பெருமாள் கவுண்டன் வலசு, சுப்பிரமணி என்பவரின் மகன் சதாசிவம்(48)என்பவருக்குசொந்தமானதோட்டத்தில் மாடு -1, கன்றுக்குட்டி -1 கட்டி வைத்திருந்ததை திருடி சென்று விட்டதாக கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்படி வழக்கு சம்மந்தமாக விசாரணைமேற்கொண்டதில், மேற்கண்ட மாடுகளை

1. பழனி (எ) பழனிச்சாமி (43), த/பெ.மணியன் (லேட்), இந்திரா நகர், பொலவக்காளிபாளையம், கோபி. 2. சோமசுந்தரம் (37), த/பெ.ரங்கசாமி(லேட்), மேட்டுக்கடை வீதி, இந்திரா நகர், பொலவக்காளிபாளையம், கோபி.

3.சோழமுத்தான் (எ) சுரேஷ் (29), த/பெ.ராஜன், மேட்டுக்கடை வீதி, இந்திரா நகர், பொலவக்காளிபாளையம், கோபி.

மேற்கண்ட எதிரிகளை கைது செய்தும் மற்றும் திருடப்பட்ட மாடுகள் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட KA 10 B 0632 pickup van- னையும் பறிமுதல் செய்தும் நிலையம் அழைத்து வந்து விசாரணைக்கு பின்னர் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி சிறையில் அடைக்கப்பட்டனர் என்பதை ஈரோடு மாவட்ட காவல்துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

## கடலூர் மஞ்சக் குப்பம்,, புனித வளனார் தொடக்கப்பள்ளியில்

# மாவட்ட துணை கண்காணிப்பாளர் தமிழ் இனியன் ஓவியக் கண்காட்சியினை திறந்து வைத்து ஓவியங்களை பார்வையிட்டார்



கலை பண்பாட்டுத் துறை, மண்டலக் கலை பண்பாட்டு மையம் தஞ்சாவூர் மாவட்ட சவகர் சிறுவர் மன்றம், கடலூர் இணைந்து உலக ஓவிய தினம் கடலூர் மஞ்சக் குப்பம், புனித வளனார் தொடக்கப் பள்ளி யில் 07.03.2026 அன்று நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 5 வயது முதல் 16 வயது வரையிலான 220 மாணவ மாணவியர் கலந்து கொண்டனர். இப்பயிற்சி முகாமினை தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநர் திரு.ம. இராஜாராமன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

இப்பயிற்சிமுகாமினை நடத்துவதற்கு திட்ட அலுவலர் திரு.ரிமன் ராஜ், குரலிசை ஆசிரியர்கள் திருமதி. சாந்தி, திருமதி. விஜயஸ்ரீ, பரதநாட்டிய ஆசிரியர்கள், திருமதி.வள்ளி, திருமதி. ஹேமாமஞ்சுளா, சிலம்பம் ஆசிரியர்கள் திரு.ப. ரகுநாத், திரு.க. குணசேகரன் ஆகியோர் பணியாற்றினர்.

இந்த ஓவியப் பயிற்சியினை திரு. மனோகரன், திருமதி.கீதா ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்களாக பணியாற்றினர்.

இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சிப் பெற்ற மாணவர்களின் ஓவியங்களை கண்காட்சியாக வைக்கப்பட்டது.

இக்கண்காட்சியினை, கடலூர் மாவட்ட துணை கண்காணிப்பாளர் திரு. தமிழ் இனியன் அவர்கள் ஓவியக் கண்காட்சியினை திறந்து வைத்து ஓவியங்களை பார்வையிட்டு பயிற்சி அளித்த ஓவிய ஆசிரியர்களையும், ஓவியம் வரைந்த சிறார்களையும் பாராட்டி சான்றிதழ்கள் வழங்கினார். இத்தகவலை தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநர் திரு.ம. இராஜாராமன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## உலக குளுக்கோமா வாரத்தை முன்னிட்டு,

# கோவை ஆர்.எஸ்.புரம் பகுதியில் உள்ள, தி ஐ ஃபவுண்டேஷன் மருத்துவமனையில் பொதுமக்களுக்கு பல்வேறு விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டம்

கண்மருத்துவசேவையில் முன்னணி வகிக்கும் தி ஐ ஃபவுண்டேஷன் கண் மருத்துவமனை, உலக குளுக்கோமா வாரத்தை முன்னிட்டு மார்ச் 8ம் தேதி முதல் 14ம் தேதிவரை பல்வேறு விழிப்புணர்வு மற்றும் இலவச கண் பரிசோதனை நிகழ்ச்சிகளை நடத்த உள்ளது.

தென்னிந்தியாவில் 27 கிளைகளை கொண்டு கடந்த 46 ஆண்டுகளாக சிறப்பான மருத்துவ சேவையை வழங்கி வரும் தி ஐ ஃபவுண்டேஷன் கண் மருத்துவமனை, சார்பாக, பொதுமக்கள் அனைவரும் கண் பார்வையை பாதுகாக்க முன்வர வேண்டும் என்ற குறிக்கோளை முன்வைத்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இது குறித்து தி ஐ ஃபவுண்டேஷன் கண் மருத்துவமனையின் மருத்துவ இயக்குநரும் குளுக்கோமா பிரிவு ஆலோசகருமான டாக்டர் சித்ரா ராமமூர்த்தி, டாக்டர் ஆர். முரளிதர்,





டாக்டர் ஐமன் அகமது கான் மற்றும் டாக்டர் நிரஞ்சனா பாலசுப்ரமணியம் ஆகியோர் செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது.. குளுக்கோமா பாதிப்பு,

உலகளவில் 76 மில்லியன் மக்கள் குளுக்கோமா நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 2.1 மில்லியன் பேர் முழுமையான பார்வை இழப்பை சந்தித்துள்ளதுடன், 4.2 மில்லியன் பேர் கடுமையான பார்வைக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவில் மட்டும் 40 வயதுக்கு மேற்பட்ட சுமார் 12 மில்லியன் மக்கள் குளுக்கோமா நோயால் பாதிக்கப்பட வாய்ப்பு இருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது. இது நாட்டில் பார்வையற்றோரில் சுமார் 12.8 சதவீதமாகும். பார்வை இழப்பை ஏற்படுத்தும் முக்கிய காரணிகளில் குளுக்கோமா மூன்றாவது இடத்தில் இருப்பதால், இந்த நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவது மிகவும் அவசியமானதாகும் என தெரிவித்தனர். மேலும், உலக குளுக்கோமா வாரத்தை முன்னிட்டு மார்ச் 8ம் தேதி முதல் 14ம் வரை தி ஐ ஃபவுண்டேஷன் கண் மருத்துவமனையின் அனைத்து கிளைகளிலும் குளுக்கோமா நோயாளிகளுக்கு இலவச கண் பரிசோதனை வழங்கப்படுகிறது. அறுவை சிகிச்சை நோயாளிகளுக்கு 10 சதவீத கட்டண சலுகையும் வழங்கப்படுகிறது. இதற்குடன் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த பல்வேறு இடங்களில் இலவச கண் பரிசோதனை முகாம்களும் நடத்தப்படுகின்றதாக தெரிவித்தனர்.

# த.வெ.க, தலைவர் விஜயின் ரசிகர்தான் அவருடன் அரசியலில் இணைந்து செல்வது குறித்து காலம் தான் தீர்மானிக்கும் நடிகர் விமல் கோவையில் பேட்டி





தயாரிப்பாளர் ராஜசேகர் தயாரிப்பில் இயக்குனர் கேந்திரன் இயக்கத்தில் நடிகர்கள் விமல், நட்டி சுப்பிரமணியம், சனக்ஷா ஸ்ரீ, பால சரவணன், முனீஸ்கான், ஆகிய பிரபலங்கள் நடிப்பில் உருவாகி உள்ள வடம் திரைப்படம் திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடி வருகிறது. இசையமைப்பாளர் D.இமான் இந்த படத்திற்கு இசையமைத்து உள்ளார்.

வடமாடு மஞ்சுவிரட்டு போட்டியை கதைக்களமாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்தத்திரைப்படம் கிராமங்களிலும் மாடுபிடி வீரர்கள் மாட்டின் உரிமையாளர்கள் என பலரது மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்நிலையில் இத்திரைப்பட குழுவினர்களான இயக்குனர் கேந்திரன், நடிகர் விமல், நடிகை சனக்ஷா ஸ்ரீ, உள்ளிட்டோர் கோவை ப்ரூக்பீல்ட் மாலில் உள்ள பிவிஆர் திரையரங்கிற்கு வருகை புரிந்து ரசிகர்களை சந்தித்தனர். செய்தியாளர்களை சந்தித்து படம் குறித்தும் படத்தின் வரவேற்பு குறித்தும் பல்வேறு விஷயங்களை பகிர்ந்து கொண்டனர்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் பேசிய நடிகர் விமல் இந்த படத்தை வெற்றி படமாக மாற்றிய தமிழக ரசிகர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொண்டார். வடமாடு மஞ்சுவிரட்டு போட்டியை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்ட இந்த திரைப்படத்தில் மாடு வளர்க்கும் கதாபாத்திரத்தில் நடித்துள்ளதாகவும் இந்தபடத்தில் வரும் மாட்டின் உண்மையான பெயர் சோழன் என்றும் அதிகமாக இனிப்புகளை உட்கொள்வார் வாழைப்பழங்களை உட்கொள்வார் என்று கூறிய அவர் இந்த திரைப்படத்தில் மாட்டிற்கும் மிக முக்கியமான பங்கு உள்ளது என தெரிவித்தார். இந்தப் படத்தில் நான் எங்கும் கஷ்டப்பட்டு நடிக்கவில்லை இஷ்டப்பட்டு நடித்தேன் என்று கூறினார்.அரசியல் தொடர்பான கேள்விக்கு அரசியலுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. ஆனால் நான் ஒரு விஜய் ரசிகர் என்றும் கில்லி படத்தில் அவருடன் இணைந்து பணிபுரிந்துள்ளேன் என தெரிவித்தார். விஜய் கில்லியில் எப்படி இருந்தாரோ அதுபோன்றுதான் தற்பொழுதும் அனைவரிடமும் அன்பாகபழகிவருகிறார் மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்று நினைக்கிறார் அவருடைய அரசியல் பயணம் வெற்றி அடைய வாழ்த்துக்கள் என தெரிவித்தார். விஜயுடன் இணைந்து செல்வீர்களாஎன்றகேள்விக்கு அது காலம் தான் தீர்மானிக்கும் என்று பதிலளித்தார். நடிகர் விமல் அரசியலுக்கு வருவாரா என்றகேள்விக்குதற்போதைக்கு நான் படங்களை நடிக்க வேண்டும் என்றுதான் இருக்கிறேன் அரசியலில் நல்லது செய்பவர்கள் அனைவருடனும் இணைந்து துணையாக இருப்பேன் என பதில் அளித்தார்.

# நந்தா பல் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் மாணவர்களுக்கான "கலைத்திருவிழா 2026"

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளை தலைவர் வி. சண்முகன் தலைமையில் நடைபெற்ற இத்திருவிழாவில் பாலக்காடு கருணா மருத்துவக் கல்லூரியின் பேராசிரியர் மற்றும், குழந்தைகள் நல மருத்துவர் பிரியம்வதா அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்.

மேலும், ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ்.நந்தகுமார் பிரதீப், மற்றும் எஸ். திருமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

முன்னதாக நந்தா பல் மருத்துக்கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதல்வர் மருத்துவர் ஜி.



ராஜ் திலக் விழாவில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்று பேசினார்.

தடகள போட்டிகள், குழு மற்றும் தனி நபர் நடனம், ஆடல், பாடல், ஆடை அலங்காரம் போன்ற பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் 325 க்கும் மேற்பட்ட பல் மருத்துக்கல்லூரி மாணவ – மாணவிகள் மிகவும் ஆர்வமுடன் கலந்துக் கொண்டார்கள்.

ஒவ்வொரு போட்டியிலும் பல்வேறு சுற்றுகளை கடந்து, முதல் மூன்று இடங்களைதக்கவைத்துக் கொண்டதன் அடிப்படையில் அதியப்படியான புள்ளிகளை பெற்று முதல் இடத்தினை வென்ற குழுவினருக்கு ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தினையும், வெற்றி பெற்ற மாணவ-மாணவிகளுக்குசான்றிதழ்கள் மற்றும் பரிசுகளையும் சிறப்பு விருந்தினர் குழந்தை நல மருத்துவர் பிரியம்வதா அவர்கள்வழங்கிபாராட்டி உரையாற்றினார்.

அப்போது கூறுகையில், உடல்ஆரோக்கியம்என்று பேசும்போது பொது சுகாதாரம், ஊட்டச்சத்து, தடுப்பூசி போன்றவற்றை மட்டுமே சிந்திக்கின்றோம். ஆனால் வாய்வழி சுகாதாரம் என்பதனை அடியோடு மறந்து விடுகிறோம். ஏனெனில் வாய் வழி என்பது உடலின் நுழைவுவாயில் ஆகும். அதாவது குழந்தை பருவநோய்களைக் கண்டறிய முதலில் வாய்குழியில் ஏற்படும் அறிகுறிகள் வைத்துதான் முடிவு செய்யப்படுகிறது. மேலும் இதனை பல் பரிசோதனை மூலம் ஆரம்பத்திலேயே கண்டறியமுடியும் என்றும், அதன் அடிப்படையில் குழந்தை மருத்துவர்களும், பல் மருத்துவர்களும் இணைந்து செயல்பட்டால் குழந்தைகளுக்கான முழு சுகாதாரப் பராமரிப்பினை உறுதி செய்யமுடியும் என்று மாணவர்களிடம் தெரிவித்தார். இத்திருவிழாவினை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்த நிர்வாக அலுவலர் மருத்துவர் கே.பி. மோகன்ராஜ் மற்றும் பேராசிரியர்களை கல்லூரி நிர்வாகத்தினர்கள்வெகுவாகபாராட்டினார்கள்.

# ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் விசிக வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சிப்பாசறை மற்றும் அரசியல் விழிப்புணர்வு கருத்தரங்கம்



ஈரோடு மாவட்டம் பெருந்துறை பழைய பேருந்து நிலையம் அருகிலுள்ள தனியார் மண்டபத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் 'விழிப்பாய் இரு நெருப்பாய் எழு' என்ற முழக்கத்துடன் வாக்குச்சாவடி பி.எல்.ஏ 2 மற்றும் அரசியல் சமூக விழிப்புணர்வு பயிற்சிப் பாசறை நடைபெற்றது. நிகழ்விற்கு பெருந்துறை சட்டமன்ற தொகுதி மாவட்டச் செயலாளர் வி.விஜயபாலன்தலைமை தாங்கினார். மறைந்த ஏ.சி. பாவரசு மற்றும் நா.செந்தமிழன் நினைவரங்குகளில் நடைபெற்ற இப்பயிற்சியினை வெளிச்சம் புரட்சிகர கலைக்குழுவின் சோ.செந்தமிழன் கலைநிகழ்ச்சிகளுடன் தொடங்கி வைத்தார். மாவட்டத் துணைச் செயலாளர் சி.அண்ணாமலை அனைவரையும் வரவேற்றார்.

பயிற்சிப் பாசறையில் விசிக துணைப் பொதுச்செயலாளர் வெ.கனியமுதன் 'அரசியல் பொதுத்தளத்தில் எழுச்சித் தமிழர்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து, வழக்கறிஞர் பிரிவு மாநிலச் செயலாளர் காஞ்சி பார்வேந்தன் 'பஞ்சமி நில உரிமைகள்' குறித்தும், மாநிலச் செயலாளர் கோவை சுசி. கலையரசன் 'பட்டியலின தலைவர்களின் தியாகங்கள்' குறித்தும், மண்டலச் செயலாளர் வை.குடியரசு மேனான் 'சனாதனச் சூழ்ச்சியும் பட்டியலின மக்களின் வீழ்ச்சியும்' என்ற தலைப்பிலும் விரிவான கருத்துரைகளை வழங்கினர்.

சிறப்பு அழைப்பாளர்களாக மண்டலச் செயலாளர்கள் ஏ.ஜாபர்அலி, மிசா.தங்கவேல் உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர். கோபி சட்டமன்றத் தொகுதி மாவட்ட செயலாளர் கஸ்தூரிதேவி மற்றும் பெருந்துறை தொகுதி நிர்வாகிகள் ஜெகதீஸ், ரமேஷ்வீரன், நவீன்குமார், ஆட்டோ பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிறைவாக சென்னிமலை ஒன்றியத் துணைச் செயலாளர் ஜெபராஜ் நன்றியுரை ஆற்றினார். இதில் பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 500-க்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கட்சித் தொண்டர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். பங்கேற்ற அனைவருக்கும் அசைவ விருந்து வழங்கப்பட்டது.

## அரசு வேலை வாங்கித்தருவதாக பணமோசடி வாலிபருக்கு 6 ஆண்டுகள் சிறை



ஈரோடு மாவட்ட குற்ற பிரிவு – அங்கன்வாடியில் அரசு வேலை வாங்கித்தருவதாக பணமோசடி செய்த வழக்கில் எதிரிக்கு ஈரோடு JM –II நீதிமன்றம் 6 வருடங்கள் சிறை தண்டனை மற்றும் ரூ 10,000/– அபராதம் விதித்து தீர்ப்பு

ஈரோடு மாவட்ட குற்றப்பிரிவில் கடந்த 23.06.2014 ம் தேதி கோபி, கரட்டடிப்பாளையம், பன்னீர்செல்வம் வீதியைச் சேர்ந்த சரவணன் மனைவி கங்கா(30) என்பவருக்கு அங்கன்வாடியில் அரசு வேலை வாங்கித்தருவதாககூறிதாராபுரம், ஆலாம்பாளையம் கிராமம், கொளத்துப்பாளையம், கிருஷ்ணபுரம், நகுலன் மகன் செல்வராஜ்(47) என்பவர் நம்பகமாக பேசி 1,39,000/–பெற்றுக்கொண்டு, வேலை வாங்கித்தராமல் ஏமாற்றி விட்டதாக கொடுத்த புகாரின்பேரில்வழக்குபதிவுசெய்யப்பட்டு, மேற்கண்ட எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டது.

மேற்படி வழக்கின் விசாரணையானது ஈரோடு JM –II நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் 09.03.2026 ம் தேதி அன்று மேற்படி குற்றவாளி செல்வராஜ்க்கு6ஆண்டுகள் சிறைதண்டனைமற்றும் ரூ.10,000/– அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது என்பதை ஈரோடு மாவட்ட காவல்துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.



கோவை சரக காவல்துறை துணைத் தலைவர் P.சாமிநாதன் (09.03.2026) அன்று ஈரோடு மாவட்டத்தில் சிறப்பாக பணிபுரிந்த காவல்துறையினருக்கு பாராட்டுச்சான்றிதழ் வழங்கினார். மற்றும் காவல் கட்டுப்பாட்டு அறையை ஆய்வு மேற்கொண்டார். மேலும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஏ.சுஜாதா உடன் இருந்தார்.

# தி.மு.க. இளைஞர் அணி – ஈரோடு மொடக்குறிச்சி “அன்பகம் உதயம்” திறப்பு விழா

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளைக்கு சொந்தமான இடத்தில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி முழுத்திருவுருவவெண்கலச் சிலை, கலைஞர் நூலகம், மொடக்குறிச்சி தொகுதி தி.மு.க. அலுவலகம் மற்றும் இளைஞர் அணி அலுவலகம் "அன்பகம் உதயம்" ஆகியவற்றின் திறப்பு விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி வரவேற்புரை வழங்கினார்.

திமுக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். இவ்விழாவிற்கு வருகை தந்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக திமுக மாநில இளைஞர்அணி துணைசெயலாளரும், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினருமான கே.இ.பிரகாஷ் நன்றியுரை ஆற்றினார்.

இந்த விழாவில் அமைச்சர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், திமுக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு இவ்விழாவை சிறப்பித்தனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.